# தமிழ் புராண இலக்கியங்கள்

❖ **பெரிய புராணம்**

**ஆசிரியர் குறிப்பு:**

❖ பெரிய புராணத்தை அருளியவர் சேக்கிழார்
❖ இவர் தற்போதைய காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள குன்றத்தூரில் பிறந்தவர்.
❖ இவரது இயற்பெயர் அருண்மொழித்தேவர்
❖ இவர் அநாபாயச் சோழனிடம் தலைமை அமைச்சராய் திகழ்ந்தவர்.
❖ இவர், உத்தம சோழப் பல்லவர் என்னும் பட்டம் பெற்றவர்.
❖ இவரைத் தெய்வ சேக்கிழார் என்றும் போற்றுவர்.
❖ இவரது காலம் கி.பி.பன்னிரண்டாம் நூற்றாண்டு
❖ சொற்கோவில் எழுப்பிய இவர், கற்கோவிலும் எழுப்பினர்.

**நூற்குறிப்பு:**

❖ தனியடியார் அறுபத்துமூவரும், தொகையடியார் ஒன்பதின்மரும் ஆக எழுபத்திருவர் சிவனடியார் ஆவார்.
❖ அவ்வடியார்கள் வரலாற்றை கூறுவதால், பெருமை பெற்ற புராணம் என்னும் பொருளில் பெரிய புராணம் எனும் பெயர் பெற்றது.
❖ இந்நூலுக்கு சேக்கிழார் இட்டப்பெயர் திருத் தொண்டர் புராணம்
❖ தில்லை நடராசப் பெருமான் உலகெலாம் என்று அடியெடுத்துக் கொடுக்க பாடப்பட்டதெனவும் கூறுவர்.
❖ இவரது பாடல்கள் அனைத்தும் தெய்வமனம் கமழும் தன்மையுடையவன.
❖ எனவே தான், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார், பக்திச்சுவைநனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ எனச் சேக்கிழார்
❖ பெருமானைப் புகழ்ந்துரைத்துள்ளார். உலகம், உயிர், கடவுள் ஆகிய மூன்றையும் ஒருங்கே
❖ காட்டும் காவியந்தான் பெரியபுராணம் என்பார் திரு.வி.கலியாண சுந்தரனார்.

❖ **பெரிய புராணம்**

❖ **அப்பூதயடிகள் தம் மனையிலுள்ள அனைத்திற்கும் திருநாவுக்கரசு என்னும் பெயரையே சூட்டல்**

“களவு, பொய், காமம், கோபம் முதலிய குற்றம் காய்ந்தார்
வளமிகு மனையின் வாழ்க்கை நிலையினார் மனைப்பால் உள்ள
அளவைகள், நிறைகோல், மக்கள், ஆவொடு மேதி மற்றும்
உளஎலாம் அரசின நாமம் சாற்றும்அவ வொழுக லாற்றார்”.

❖ **திங்க;ர் வந்த திருநாவுக்கரசர் தண்ணீர்ப்பந்தல் காணல்.**

அளவில்சனம் செலவொழியா வழிக்கரையில் அருளுடையார்
உளமையை தண்ணளித்தாய் உறுவேனில் பரிவகற்றிக்
குளம்நிறைந்த நீர்த்தடம்போல் குளிர்தூங்கும் பரப்பினதாய்
வளம்மருவும் நிழ்தருதண் ணீர்ப்பந்தர் வந்தணைந்தார்.

❖ **தண்ணீர்ப்பந்தலில் தம் பெயர் இருக்கக் கண்டு வியப்புறுதல்**

வந்தணைந்த வாகீசர் மந்தமா ருதசீதப்
பந்தருடன் அமுதமாம் தண்ணீரும் பார்த்தருளிச்
சிந்தைவியப் புறவருவார் திருநாவுக் கரசெனும்பேர்
சந்தமுற வரைந்ததனை எம்மருங்கும் தாங்கண்டார்

❖ **திருநாவுக்கரசு எனப் பெயர் வைத்த காரணம் கேட்டல்**

ஆறணியும் சடைமுடியார் அடியார்க்கு நீர்வைத்த
ஈறில்பெருந் தண்ணீர்ப்பந் தரில்நும்பேர் எழுதாதே
வேறொருபேர் முன்னெழுத வேண்டியகா ரணம்என்கொல்
கூறுமென உதிர்மொழிந்தார் கோதில்மொழிக் கொற்றவனார்

❖ **அப்பூதியடிகளார் திருநாவுக்கரசர் பெருமையை உரைத்தல்**

பொங்குகடல் கல்மிதப்பிற் போந்தேறும் அவர்பெருமை
அங்கணர்தம் புவனத்தில் அறியாதார் யாருளரே
மங்கலமாம் திருவேடத் துடனின்றிவ் வகைமொழிந்தீர்
எங்குறைவீர் நீர்தாம்யார் இயம்புமென இயம்பினார்

❖ **தாமே திருநாவுக்கரசர் எனல்**

திருமறையோர் அதுமொழியத் திருநாவுக் கரசர்அவர்
பெருமையறிந் துரைசெய்வார் பிறதுறையி னின்றேற
அருளுபெருஞ் சூலையினால் ஆட்கொள்ள அடைந்துய்ந்த
தெருளும்உணர் வில்லாத சிறுமையேன் யான்என்றார்

❖ **திருநாவுக்கரசரை அப்பூதியடிகள் வணங்குதல்**

அரசறிய உரைசெய்ய அப்பூதி அடிகள்தாம்
கரகமலம் மிசைகுவியக் கண்ணருவி பொழிந்திழிய
உரைகுழறி உடம்பெல்லாம் உரோமபுள கம்பொலியத்
தரையின்மிசை வீழ்ந்தவர்தம் சரண கமலம் பூண்டார்.

❖ **திருநாவுக்கரசர் அமுதுண்ண இசைதல்**

ஆசனத்தில் பூசனைகள் அமர்வித்து விருப்பினுடன்
வாசம்நிறை திருநீற்றுக் காப்பேந்தி மனந்தழைப்பத்
தேசமுய்ய வந்தவரைத் திருவமுது செய்விக்கும்
நேசமுற விண்ணப்பம் செயஅவரும் அதுநேர்ந்தார்.

❖ **வாழையிலை அரிந்துகொணர மூத்த திருநாவுக்கரசை அனுப்புதல்**

தூயநற் கறிக ளான அறுவகைச் சுவையால் ஆக்கி
ஆயஇன் னமுதும் ஆக்கி அமுதுசெய் தருளத் தங்கள்
சேயவர் தம்மில் மூத்த திருநாவுக் கரசை வாழை
மேயபொற் குருத்துக் கொண்டு வாஎன விரைந்து விட்டார்

❖ **மூத்த திருநாவுக்கரசு வாழைக்குருத்து அரியும்போது பாம்பு தீண்டல்**

நல்லதாய் தந்தைஏவ நானிது செயப்பெற் றேனென்று
ஒல்லையில் விரைந்து தோட்டத் துள்புக்குப் பெரியவாழை
மல்லலம் குருத்தை ஈரும் பொழுதினில் வாள ராவொன்று
அல்லலுற் றழுங்கிச் சோர அங்கையில் தீண்டிற் றன்றே.

❖ **மாண்ட மகனை மறைத்துத் திருவமுது படைத்திடத் திருநாவுக்கரசை அழைத்தல்**

தளர்ந்துவீழ் மகனைக் கண்டு தாயரும் தந்தை யாரும்
உளம்பதைத்து உற்று நோக்கி உதிரம்சேர் வடிவம்
மேனி விளங்கிய குறியும் கண்டு விடத்தினால் வீந்தான்
என்று துளங்குதல் இன்றித் தொண்டர் அமுதுசெய்
வதற்குச் சூழ்வார்.

❖ **திருநீறு அணியச் செய்ய மூத்த திருநாவுக்கரசு எங்கே என்று வாகீசர் கேட்டலும், அப்பூதியடிகள் கூறிய விடையும்**

ஆதிநான் மறைநூல் வாய்மை அப்பூதி யாரை நோக்கிக்
காதலர் இவர்க்கு மூத்த சேயையும் காட்டும் முன்னே
மேதகு பூதி சாத்த என்றலும் விளைந்த தன்மை
யாதும்ஒன் றுரையார் இப்போது இங்கவன் உதவான் என்றார்

❖ **நிகழ்ந்தது யாது என்று வினவுதல்**

அவ்வுரை கேட்ட போதே அங்கணர் அருளால் அன்பர்
செவ்விய திருவுள் ளத்தோர் தடுமாற்றஞ் சேர நோக்கி
இவ்வுரை பொறாதென் உள்ளம், என்செய்தான் இதற்கொன் றுண்டால்
மெய்விரித் துரையும் என்ன விளம்புவார் விதிர்ப்புற் றஞ்சி

❖ **திருநாவுக்கரசர் பதிகம்பாடி மூத்த திருநாவுக்கரசை உயிர்ப்பித்தல்**

நாவினுக் கரசர் கேளா நன்றுநீர் புரிந்த வண்ணம்
யாவரித் தன்மை செய்வார் என்றுமுன் எழுந்து சென்றே
ஆவிதீர் சவத்தை நோக்கி அண்ணலார் அருளும் வண்ணம்
பாவிசைப் பதிகம் பாடிப் பணிவிடம் பாற்று வித்தார்.

**சீறாப்புராணம்**

**ஆசிரியர் குறிப்பு:**

- ❖ சீறாப்புராணத்தை இயற்றியவர் உமறுப்புலவர்
- ❖ இவர் எட்டயபுரம் கடிகை முத்துப் புலவரின் மாணவர்
- ❖ அப்துல்காதிர் மரைக்காயர் என்ற வள்ளல் சீதக்காதியின் வேண்டுகோளின் வண்ணமே உமறுப்புலவர் சீறாப்புராணம் எழுதத் தொடங்கினார்.
- ❖ நூல் முற்றும் முன்னமே சீதக்காதி மறைந்தார்.
- ❖ அவருக்குப் பின் அபுல்காசின் என்ற வள்ளல் உதவியால் சீறாப்புராணம் நிறைவுற்றது.
- ❖ உமறுப்புலவர் வள்ளல் பெருமக்களை நூலின் பலவிடங்களில் நினைவு கூர்ந்து போற்றுகிறார்.
- ❖ இவர் என்பது பாக்களால் ஆகிய முதுமொழி மாலை என்னும் நூலையும் படைத்தளித்துள்ளார்.
- ❖ இவர் காலம் பதினேழாம் நூற்றாண்டு.

**நூற் குறிப்பு**

- ❖ இறைவனின் திருந்தூதர் நபிகள் நாயகத்தின் சீரிய வரலாற்றினை எடுத்தியம்பும் இனிய நூல் சீறாப்புராணம்.
- ❖ சீறா – வாழ்க்கை, புராணம் - வரலாறு என பொருள்படும்.
- ❖ இந்நூல் விலாதத்துக் காண்டம், நுபுவ்வத்துக் காண்டம், ஹிஜ்ரத்துக் காண்டம், என்னும் முப்பெரும் பிரிவுகளை கொண்டது.
- ❖ ஐயாயிரத்து இருபத்தேழு விருத்தப்பாக்களால் ஆனது.
- ❖ பாடப்பகுதி விலாதத்துக் காண்டத்தில் உள்ளது.

**சீறாப்புராணம்**

**விலாதத்துக் காண்டம்**
**புலி வசனித்த படலம்**
**ஒருவன் முகம்மதுநபியை வணங்கிக் கூறிய செய்தி**

படர்ந்த தெண்டிரைப் பெருக்கெடுத் தெறிநதிப் பரப்பைக்
கடந்து கான்பல கடந்தரு நெறிசெலுங் காலை
கொடுத்த மக்கரித் திரளெனும் குழுவினுள் ஒருவன்
அடைந்து சீரகு மதினடி தொழுதறை குவனால்.

**புலி இருக்குமிடம் தெரிவித்தல்**

நிகழுந் தாரையில் காவதத் துள்ளுறை நெடுநீர்
அகழி போன்றவோர் ஓடையுண் டதனுக் கணித்தாய்ப்
புகலு தற்கரி தடவியுண் டவ்வழிப் பொருந்தி
உகளு மாங்கொரு பாதகக் கொடுவரி உழுவை

**புலியின் தோற்றம்**

நீண்ட வால்நிலம் புடைத்திடக் கிடந்துடல் நிமிர்ந்து
கூண்ட கால்மடிந் திருவிழி கனல்கள் கொப்பளிப்பப்
பூண்ட வெள்ளெயி றிலங்கிட வாய்புலால் கமழ
வீண்டு முட்செறி வனத்திடை சினத்தொடும் இருக்கும்

**புலியின் வெறிச்செயல்**

நிரம்பும் வள்ளுகிர் மடங்கலின் இனங்களில் நிணமுண்
டிரும்ப னைக்கைமும் மதகரிக் கோட்டினை யீழ்த்திட்
டுரம்பி எந்துதி ரங்களை மாந்திநின் றுறங்கா
தரும்பெ ருங்கிரி பிதிர்ந்திட வுருமினும் அலறும்

அதிர்ந்தி டுந்தொனி செவியுற அடவியில் அடைந்த
முதிர்ந்த மேதியும் கவையடிக் கேழலும் முழுதும்
பொதிந்த மெய்மயி ரெண்கினங் களுமரைப் போத்தும்
பதிந்த கால்தடு மாறிட வீழ்ந்துடல் பதைக்கும்

முகம்மதுநபி புலியிருக்குமிடம் கேட்டல்
என்ற வாசகம் செவிபுக எழிலிரு புயமும்
குன்று போலுற வீங்கின முறுவல்கொண் டிராய்
நின்ற வேங்கையெவ் வுழியென நிகழ்த்தினர் அவனும்
வென்றி வாரள சேயணித் தெனவிளம் பினனே.

**முகம்மது நபி வருவதைப் புலி பார்த்தலும் வணங்குதலும்**

மாதி ரத்துறை கேசரி நிகர்முகம் மதுதம்
பூத ரப்புயம் அசைதரப் புளகிதத் தோடும்
காது செங்கதிர் வேவ்வலக் கரத்திடை கவின
வீதி வாய்வரக் கண்டது பெருவரி வேங்கை
கண்ட போதினில் வால்குழைத் தரியமெய் கலங்கிக்
கொண்டு மென்மெல நடந்துதன் பெருஞ்சிரங் குனித்துத்
தண்ட ளிர்ப்பத் தெரிசனைக் கெனச்சலாம் உரைத்துத்
தெண்டன் இட்டது வள்ளுகிர் வள்ளுகிர் திண்டிறல் புலியே.

**முகம்மதுநபி, தன் கரத்தினால் புலியைத் தடவுதல்**

வந்து தெண்டனிட் டெழுந்துவாய் புதைத்துற வணங்கிப்
புந்தி கூர்தரப் போற்றிய வள்ளுகிர்ப் புலியை
மந்த ராசல முகம்மது நனிமனம் மகிழ்ந்து
சந்த மென்மணிக் கரத்தினால் சிரமுகம் தடவி

**முகம்மதுநபியின் செயலைக்கண்டோர் வியந்து போற்றுதல்**

படுகொ லைப்புலி மெய்யுறப் பணிந்திவர் பாதத்து
அடிவ ணங்கிய காரண வதிசயம் அதனால்
உடைய வன்திருத் தூதரே உண்மையென் றுன்னித்
தினமு டைந்தநெஞ் சாயினர் அறிவினில் தெளிந்தோர்.

## நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்

**ஆசிரியர் குறிப்பு:**

- ❖ கேரளா மாநிலத்திலுள்ள திருவஞ்சைக்களத்தில் பிறந்தவர் குலசேகரப் பெருமாள்
- ❖ இராமபிரானிடம் பக்தி மிகுதியாக வாய்க்கப் பெற்ற காரணத்தால், இவர் குலசேகரப் பெருமாள் என்றும் அழைக்கப்பட்டார்.
- ❖ இவர் பன்னிரு ஆழ்வார்களில் ஒருவர்.
- ❖ இவர் அருளிய திருவாய்மொழி நாலாயிரத்திவ்விய பிரபந்தத்தில் ஒன்று.
- ❖ இதில் நூற்றைந்து பாசுரங்கள் உள்ளன.
- ❖ இவர் வடமொழி, தென்மொழி இரண்டிலும் வல்லவர்.
- ❖ குலசேகரர் திருவரங்கத்தின் மூன்றாவது மதிலைக் கட்டியதால் அதற்கு குலசேகரன் வீதி என்னும் பெயர் இன்றும் வழங்கி வருகிறது.
- ❖ இவரது காலம் கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டு.

**நூற் குறிப்பு:**

- ❖ தமிழகத்தின் பழம்பெரும் சமயங்களுள் ஒன்று வைணவம்
- ❖ வைணவம் திருமாலை முழுமுதற் கடவுளாய்க் கொண்டு போற்றும்.

❖ பன்னிரு ஆழ்வார்கள் பாடியருளிய தேனினும் இனிய தீந்தமிழ்ப் பனுவல் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்.

"மீன்நோக்கும் நீள்வயல்சூழ் வித்துவக்கோட் டம்மானென்
பானோக்கா யாகிலுமுன் பற்றல்லால் பற்றில்லேன்
தானோக்கா தெத்துயரம் செய்திடினும் தார்வேந்தன்
கோனோக்கி வாழுங் குடிபோன் றிருந்தேனே".

- குல சேகர ஆழ்வார்

**தேம்பாவணி**

**ஆசிரியர் குறிப்பு:**

- ✓ பெயர் - வீரமாமுனிவர்
- ✓ இயற்பெயர் - கான்ஸ்டாண்டின் ஜோசப் பெஸ்கி
- ✓ பெற்றோர் - கொண்டல் போபெஸ்கி – எலிசபெத்
- ✓ பிறந்த ஊர் - இத்தாலி நாட்டில் காஸ்திக்கிளியோன்
- ✓ அறிந்த மொழிகள் - இத்தாலியம் இலத்தீன், கிரேக்கம், எபிரேயம், தமிழ், தெலுங்கு, சமற்கிருதம்.
- ✓ தமிழ்க் கற்பித்தவர் - மதுரைச் சுப்பிரதீபக் கவிராயர்
- ✓ சிறப்பு – முப்பதாம் வயதில் தமிழகம் வந்து தமிழ் பயின்று காப்பியம் படைத்தமை

❖ **தேம்பாவணி**

1. நகைசெய் தன்மையி னம்பெழீ இத் தாய்துகள்
பகைசெய் நெஞ்சமும் பற்றலு மொன்றுற
முகைசெய் மேனி தழுவிமுத் திட்டலுங்
குகைசெய் யின்பெழக் கோலமிட் டொத்ததே.

- வீரமா முனிவர்

❖ **இயற்றிய நூல்கள்**

1. ஞானோபதேசம்
2. பராமார்த்த குருகதை
3. சதுரகராதி
4. திருக்காவலூர்க் கலம்பகம்
5. தொன்னூல் விளக்கம்

- ✓ காலம் - 1680 – 1747

✹ **நூல் குறிப்பு:**

- ✓ தேம்பாவணி – தேம்பா + அணி – வாடாதமாலை தேம்பாவணி தேம் + பா + அணி – தேன் போன்ற இனிய பாடல்களாலான மாலை.
- ✓ இந்நூல் கிறித்தவச் சமயத்தாரின் கலைக் களஞ்சியம் என அழைக்கப்படுகிறது.
- ✓ இந்நூலில் மூன்று காண்டங்களும் முப்பத்தாறு படலங்களும் உள்ளன. பாடல்களின் எண்ணிக்கை மூவாயிரத்து அறுநூற்றுப் பதினைந்து.

➢ **வில்லிபாரதம் - வில்லிபுத்தூரார்**

✹ **ஆசிரியர் குறிப்பு**

- ✓ பெயர் - வில்லிப்புத்தூரார்
- ✓ தந்தையார் - வீரராகவர்
- ✓ ஆதரித்தவர் - வக்கபாகையை ஆண்ட வரபதி ஆட்கொண்டான்.
- ✓ காலம் - பதினான்காம் நூற்றாண்டு

❖ **வில்லிபாரதம்**

1. வான்பெற்ற நதிகமழ்தாள் வணங்கப் பெற்றேன்
மதிபெற்ற திருவுளத்தால் மதிக்கப் பெற்றேன்
தேன்பெற்ற துழாய் அலங்கல் களப மார்பும்
திருப்புயமும் தைவந்து தீண்டப் பெற்றேன்
ஊன்பெற்ற பகழியினால் அழிந்து வீழ்ந்தும்
உணர்வுடன்நின் திருநாமம் உரைக்கப் பெற்றேன்
யான்பெற்ற பெருந்தவப்பே(று) என்னை அன்றி
இருநிலத்தில் பிறந்தோரில் யார்பெற் றாரே.

- வில்லிபுத்தூரார்

- **நூல் குறிப்பு**

✓ வில்லிபாரதம் பத்து பருவம் கொண்டது. நாலாயிரத்து முந்நூற்றைம்பது விருத்தப் பாடலால் ஆனது.

➢ **திருவிளையாடற் புராணம்** (ஒன்பதாம் வகுப்பு)

➢ **ஆசிரியர் குறிப்பு:**

❖ பரஞ்சோதி முனிவர் நாகை மாவட்டத்திலுள்ள திருமறைக்காடு (வேதாரண்யம்) என்னும் ஊரில் பிறந்தவர்.
❖ தமிழிலும் வடமொழியிலும் புலமை பெற்றவர்
❖ இவரின் தந்தையார் மீனாட்சி சுந்தர தேசிகர் ஆவார்.
❖ பரஞ்சோதி முனிவர் துறவியாகிச் சிவாலயங்கள் தோறும் சென்று இறைவனை வழிபட்டு வந்தார்.
❖ மதுரை நகரினை அடைந்து மீனாட்சி அம்மனையும் சோமசுந்தரக் கடவுளையும் வணங்கியவர், அந்நகரிலேயே சிலகாலம் தங்கியிருந்தார்.
❖ அந்நகரத்தார் அவரைக் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, திருவிளையாடற் புராணத்தை இயற்றினார்.
❖ அந்நூலைச் சிவபெருமான் திருக்கோவிலின் எதிரே உள்ள அறுகால் பீடத்தில் இருந்து வடமொழி தென்மொழிப் புலவர் யாவரும் போற்ற அரங்கேற்றினார்.
❖ திருவிளையாடற் போற்றிக் கலிவெண்பா, மதுரைப்பதிற்றுப்பத்தந்தாதி ஆகிய நூல்களையும், வேதாரண்ய புராணம் (திருமறைக்காட்டுப் புராணம்) என்னும் மொழிபெயர்ப்பு நூலையும் இயற்றியுள்ளார்.

**திருவிளையாடற் புராணம்**

- **நூல் குறிப்பு:**

❖ திருவிளையாடற் புராணம் கந்தபுராணத்தின் ஒரு பகுதியான ஆலாசிய மான்மியத்தை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்டது.
❖ இந்நூல் மதுரைக்காண்டம் (பதினெட்டுப் படலம்) கூடற்காண்டம் (முப்பது படலம்) திருவாலவாய் காண்டம் (பதினாறு படலம்) என்னும் முப்பெரும் பகுதிகளையும் படலம் என்னும் அறுபத்து நான்கு உட்பிரிவுகளையும் உடையது.
❖ இதில் மூவாயிரத்து முந்நூற்று அறுபத்து மூன்று விருத்தப்பாக்கள் உள்ளன.
❖ மதுரையில் இறைவன் நிகழ்த்திய அறுபத்து நான்கு திருவிளையாடல்களை இப்படலங்கள் விளக்குகின்றன.
❖ இந்நூல், இறைவனின் திருவிளையாடல்களை விளக்கி எழுந்த நூல்களுள் வரிவானதும், சிறப்பானதும் ஆகும்.
❖ தொடைநயமும் பக்திச்சுவையும் மிக்க இந்நூலுக்குப் பண்டிதமணி ந.மு. வேங்கடசாமி உரையெழுதியுள்ளார்.
❖ இறைவனின் திருவிளையாடல்கள் பற்றிய பிற நூல்கள்:
    1. செல்லிநகர்ப் பெரும்பற்றப் புலியூர் நம்பியின் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் (வேம்பத்தூர் திருவிளையாடற் புராணம்)
    2. தொண்டை நாட்டு இளம்பூர் வீமநாதப் பண்டிதரின் கடம்பவன புராணம்
    3. தொண்டைநாட்டு வாயற்பதி அன தாரியப்பனின் சுந்தரபாண்டியன்.

**திருவிளையாடற் புராணம்**

❖ புராணம் என்றால் வரலாறு என்று பொருள்
❖ சிவபெருமானின் திருவிளையாடல்களைப் பற்றிக் கூறும் நூல்

- இறைவனின் திருவிளையாடல்களைப் பற்றி முதன் முதலில் கூறிய கல்லாடம், சுந்தரபாண்டியம்
- கல்லாடத்தின் ஆசிரியர் கல்லாடர், 11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்
- ‘கல்லாடம் கற்றவனோடு மல்லாடாதே’ என்பது பழமொழி
- முதன் முதலில் (13 நூற்றாண்டு) திருவிளையாடற் புராணம் பாடியவர் பெரும்பற்றப் புலியூர் நம்பி
- இவர் பாடிய திருவிளையாடற் புராணம் திருவாலாவாய் உடையார் திருவிளையாடற் புராணம் என்று அழைக்கப்படுகிறது.
- அடுத்துத் திரு விளையாடற் புராணம் எழுதியவர் பரஞ்சோதி முனிவர்
- இவர் ஊர் திருமறைக்காடு
- காலம் 16 ஆம் நூற்றாண்டு
- பரஞ்சோதியின் திருவிளையாடற்புராணமே புகழ்பெற்றது.
- பரஞ்சோதி திருவிளையாடல் என்றே அழைக்கப்படுகிறது.
- இது சொக்கர் சோமசுந்தரப் பெருமானின் திருவிளையாடலைக் கூறுகிறது.
- பரஞ்சோதியின் திருவிளையாடற் புராணம் மூன்று காண்டம் (மதுரை, கூடல், திருவாலவாய்) 68 படலம், 3363 பாடல்களைக் கொண்டது.
- இப்புராணங்கள் ஆலாஸ்ய மகாத்மியம் என்ற வடமொழி நூலின் தழுவல்கள் ஆகும்.

**இறைவனிடம் தருமி வேண்டல்**

1. ஐய யாவையும் அறிதி யேகொலாம்
வையை நாடவன் மனக்க ருத்துணர்ந்(து)
உய்ய வோர்கவி யுரைத்தெ னக்கருள்
செய்ய வேண்டுமென் றிரந்து செப்பினான்.

**இறைவன் தருமிக்குப் பாடல் அருளல்**

2. தென்ன வன்குல தெய்வ மாகிய
மன்னர் ‘கொங்குதேர் வாழ்க்கை’ யின்தமிழ்
சொன்ன லம்பெறச் சொல்லி நல்கினார்
இன்னல் தீர்ந்தவன் இறைஞ்சி வாங்கினான்.

**பாண்டியன் களிகூர்தல்**

3. அளக்கில் கேள்வியார் அரசன் முன்புபோய்
விளக்கி அக்கவி விளம்பி னார்கடன்
உளக்க ருத்துநேர் ஒத்த லால்சிரந்
துளக்கி மீனவன் மகிழ்ச்சி தூங்கினான்.

**நக்கீரன் தருமியை விலக்குதல்**

4. வேந்தன் ஏவலால் விபுதர் தம்மொடும்
போந்து மீண்டவைப் புறம்பு தூங்கிய
ஆய்ந்த பொற்கிழி அறுக்கும் நம்பியை
நேர்ந்து கீரனில் லெனவி லக்கினான்.

**தருமி இறைவனிடம் முறையிடுதல்**

5. செய்யுள் கொண்டுபோய்த் திருமுன் வைத்துளப்
பையுள் கொண்டஅப் பனவன் என்னைநீ
மையுண் கண்டஇவ் வழுவு பாடலைக்
கையுள் நல்கினாய் கதியி லேற்கெனா.

**இறையனாரும் நக்கீரரும்**

6. ஆரவை குறுகி நேர்நின் றங்கிருந் தவரை நோக்கி
யாரைநம் கவிக்குக் குற்றம் இயம்பினார் என்னா முன்னம்
கீரனஞ் சாது நானே கிளத்தினேன் என்றான் நின்ற
சீரணி புலவன் குற்றம் யாதெனத் தேராக் கீரன்.

7. சொற்குற்றம் இன்று வேறு பொருட்குற்றம் என்றான் தூய
பொற்குற்ற வேணி அண்ணல் பொருட்குற்றம் என்னை? என்றான்
தற்குற்றம் வருவது ஓரான் புனைமலர்ச் சார்பால் அன்றி
அற்குற்ற குழற்கு நாற்றம் இல்லையே என்றான் ஐயன்.

8. பரவிநீ வழிபட்டு ஏத்தும் பரஞ்சுடர் திருக்காளத்தி
அரவுநீர்ச் சடையார் பாகத்து அமர்ந்தஞா னப்பூங் கோதை
இரவினீங் குழலும் அற்றோ என அஃதும் அற்றே என்னா
வெருவிலான் சலமே முற்றச் சாதித்தான் விளைவு நோக்கான்.

**நெற்றிக்கண் காட்டினும் குற்றம் குற்றமே**

9. கற்றைவார் சடையான் நெற்றிக் கண்ணினைச் சிறிதே காட்டப்
பற்றுவான் இன்னும் அஞ்சான் உம்பரார் பதிபோல் ஆகம்
முற்றுநீர் கண்ணா னாலும் மொழிந்தநும் பாடல் குற்றம்
குற்றமே யென்றான் தன்பால் ஆகிய குற்றம் தேரான்.

**நெற்றிக்கண் வெப்பத்தால் நக்கீரன் வருந்தலும் இறைவன் மறைதலும்**

10. தேய்ந்த நாண்மதிக் கண்ணியால் நுதல்விழிச் செந்தீப்
பாய்ந்த வெம்மையில் பொறாதுபொற் பங்கயத் தடத்துள்
ஆய்ந்த நாவலன் போய்விழுந் தாழ்ந்தனன் அவனைக்
காய்ந்த நாவலன் இம்மெனத் திருவுருக் கரந்தான்.

\- பரஞ்சோதி முனிவர்

**மேற்கோள்**

"கண்ணுதற் பெருங்கடவுளும் கழகமோடு ஆய்ந்து பண்ணுறத் தெரிந்தாய்ந்த இப்பசுந்தமிழ் ஏனை மண்ணிடைச் சில இலக்கண வரம்பிலா மொழிபோல் எண்ணிடப் படக்கிடந்ததா? எண்ணவும் படுமோ?" என்ற பரஞ்சோதியின் பாடல் சங்கம் குறித்தும், தமிழன் ஏற்றம் குறித்தும் கூறுகிறது.

எங்களது Facebook பக்கம்

English – Examsdaily தமிழ் – Examsdaily Tamil

எங்களது WhatsAPP Group - Click Here